**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>O.S.No. 179/2019</u>**

நாள் 22.01.2025

DW1 – குமார்

த/பெ – லேட்.கே.என்.கருப்பசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of January 2025.)**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. தாவா சொத்து எனது தாத்தா நாகப்ப முதலியார் கிரையமாக வாங்கிய சொத்து என்றால் சரிதான். அந்த நாகப்ப முதலியாருக்கு எனது அப்பா கருப்பசாமி.1, துரைசாமி.2, ஜெகநாதன்.3, ராஜம்மாள்.4, குஞ்சம்மாள்.5 மற்றும் இறந்து போன வேலுச்சாமி.6 ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். எனது அப்பா கருப்பசாமி 19.02.1999–ம் தேதியில் இறந்து போய்விட்டார் என்றால் சரிதான். எனது அப்பா உயிரோடு இருந்த காலம் வரையில் சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பா இறந்த பின்னிட்டு தான் நானும், எனது உடன் பிறந்த சகோதரர், சகோதரிகள் மற்றும் எனது சித்தப்பாக்கள் மற்றும் அத்தைகள் ஆகியோர் எல்லோரும் சேர்ந்து 11.02.2004–ம் தேதியில் பதிவு பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் எங்களது குடும்பத்திற்கு பாகமாக வந்த சொத்துக்களை நானும், எனது தங்கை வாதி அலமேலு, எனது அண்ணன் சண்முகசுந்தரத்தின் வாரிசுகள் எல்லோரும் சேர்ந்து அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். அப்போது ஒரு கடையை நான் 2006–ம் ஆண்டில் அப்துல் ரசாக் என்பவருக்கு மாத வாடகைக்கு விட்டேன். அவர் 2010–ம் ஆண்டில் காலி செய்து விட்டார். அது குறித்து பி.வா.சா.ஆ.1 வாடகை ஒப்பந்தத்தை நாங்கள் ஏற்படுத்திக் கொண்டிருந்தோம். அந்த கடையானது 19 அடி நீளம், 16 அடி அகலம்

கொண்டது. மீதமுள்ள இரண்டு கடைகளையும் நான் இரண்டு நபர்களுக்கு பாலசுப்பிரமணியம், மகாலிங்கம் ஆகியோருக்கு மாத வாடகைக்கு விட்டு வாடகையை இன்றைய தேதி வரையில் நான் பெற்று வருகிறேன்.

2. மேற்படி 3 கடைகளுக்கும் பின்புறத்தில் உள்ள வீட்டில் தான் நானும், எனது மனைவியும் குடியிருந்து வருகிறோம். நான் பாலசுப்பிரமணியம் என்பவருக்கு கதவு எண்.3/28-3 கடையை மாத வாடகைக்கு கொடுத்தது சம்பந்தமாக நாங்கள் ஏற்படுத்திக் கொண்ட 29.01.2021-ம் தேதியிட்ட வாடகை ஒப்பந்த பத்திரத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் மேற்படி 29.01.2021-ம் தேதியிட்ட பதிவு பெறா வாடகை ஒப்பந்த பத்திரம் அசல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டது.

3. மேற்படி பாலசுப்பிரமணியம் என்பவரிடம் இருந்து தான் இன்றைய தேதி வரையில் நான் வாடகை பெற்று வருகிறேன். அப்துல் ரசாக் என்பவருக்கு 3/28-1 கடையை வாடகைக்கு விட்டிருந்தேன். அவர் வாடகையை எனக்கு தராததால் தான் எனது தங்கையான இந்த வழக்கின் வாதி அலமேலு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த அப்துல் ரசாக் அந்த கடையை காலி செய்த பிறகு அந்த 1-ம் நம்பர் கடையை 4-ம் பிரதிவாதி சின்னசாமிக்கு மாத வாடகைக்கு விட்டேன். அந்த 4-ம் பிரதிவாதி வாடகை தர மறுத்ததாலும், 4-ம் பிரதிவாதி மற்ற வாடகைதாரர்களையும் மிரட்டியதால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 4-ம் பிரதிவாதி MM clothing என்ற பெயரில் ஜவுளிக் கடையை வைத்து நடத்தி வந்தார். 4-ம் பிரதிவாதி அவர் நடத்தி வரும் ஜவுளிக் கடைக்கு லைசென்ஸ் பெறுவதற்காக வாடகை ஒப்பந்தம் போட்டு தருமாறு என்னைக் கேட்டார் என்றால் சரிதான். அதற்காக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 4-ம் பிரதிவாதி என்னை அழைத்துச்

சென்று வாடகை ஒப்பந்தம் என்று சொல்லி என்னிடம் கையொப்பம் வாங்கினார் என்றால் சரிதான். 4−ம் பிரதிவாதி சின்னச்சாமியை நம்பி நான் வாடகை ஒப்பந்த பத்திரத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். 4−ம் பிரதிவாதிக்கு எனது தாயார், எனது அண்ணன் மற்றும் வாதியான எனது தங்கை பவர் பத்திரம் எதுவும் எழுதி தரவில்லை என்றால் சரிதான்.

4. 15.02.2011−ம் தேதியிட்ட பவர் பத்திரத்தின் அடிப்படையில் 4−ம் பிரதிவாதி ஒரு பெரியசாமிக்கு ஒரு கிரைய ஒப்பந்த பத்திரத்தை எழுதி கொடுத்துள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. அதைப்பொறுத்து பணம் ஏதேனும் 4−ம் பிரதிவாதி வாங்கினாரா என்று 4−ம் பிரதிவாதி என்னிடம் ஏதேனும் தெரிவித்தாரா? என்றால் இல்லை. அந்த கிரைய ஒப்பந்த பத்திரத்தை ரத்து செய்த விபரமும் எனக்குத் தெரியப்படுத்தவில்லை. அதேபோல் 4−ம் பிரதிவாதி 16.07.2014−ம் தேதியில் 5−ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் கிரைய ஆவணம் பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது. அவ்வாறு 4−ம் பிரதிவாதி 5−ம் பிரதிவாதிக்கு கிரைய பத்திரம் எழுதி கொடுக்குமாறு நான் எந்த ஒரு ஒப்புதலும் கொடுக்கவில்லை. 4−ம் பிரதிவாதி, 5−ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் கிரைய ஆவணத்திற்கு உண்டான கிரைய தொகையை 4−ம் பிரதிவாதி என்னிடம் கொடுக்கவில்லை. அந்த கிரைய ஆவணம் எழுதி கொடுத்தது சம்பந்தமாக 4−ம் பிரதிவாதி என்னிடம் எதுவும் தெரிவிக்கவும் இல்லை.

5. தாவா சொத்தில் எனது மகன்களுக்கும் பங்கு உண்டு என்றால் சரிதான். 4−ம் பிரதிவாதி என்னிடம் 5−ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்ததாக சொல்லப்படும் கிரைய தொகைக்கு ரசீது ஏதேனும் எழுதி கொடுத்தேனா? என்றால் இல்லை. இன்றைய தேதி வரையில் 4−ம் பிரதிவாதி நடத்தி வரும் ஜவுளிக்கடைக்கு வாடகை எதுவும்

கொடுப்பதில்லை. நான் எனது எதிர் வழக்குரையில் பாரா 5–ல் இறந்து போன 2–ம் பிரதிவாதி பானுமதி, 3–ம் பிரதிவாதி ஆகியோர் கோயமுத்தூரில் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு திருமணம் நடைபெற்ற பிறகு தான் கோயமுத்தூரில் வசித்து வந்தார்கள். அதற்கு முன்பு பெருமாநல்லூரில் குடியிருந்து வந்தார்கள். 4–ம் பிரதிவாதி 2019–ம் ஆண்டில் ஜீன் மாதத்தில் மற்ற இரண்டு கடைகளில் வாடகைக்கு இருந்த பாலசுப்பிரமணியம், மகாலிங்கம் ஆகிய இருவரையும் கடையை காலி செய்ய வேண்டும் என்று மிரட்டினார். இன்றைய தேதி வரையில் தாவா சொத்தின் ஒரு பகுதியில் நான் குடியிருந்து வருகிறேன். மேற்படி பாலசுப்பிரமணியன் மற்றும் மகாலிங்கம் ஆகியோரிடமிருந்துமாத வாடகையை நானும் எனது அண்ணன் மகள் ராகவி ஆகிய இருவரும் இன்றைய தேதி வரையில் பெற்று வருகிறோம். தாவா சொத்தில் எனக்கும் எனது தங்கை வாதிக்கும் எனது அண்ணன் மகள் ராகவிக்கும் சரி சம பாக பாத்தியம் உண்டு என்றால் சரிதான். வாதியின் வழக்கை ஒத்துக்கொண்டு நான் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதனால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரிதான்.

**(4,5–ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)**

**மறுவிசாரணை** இல்லை

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.01.22 16:22:25 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**